# 19

# ஸூரா அல்மாஊன்

## سُوْرَةُ الْمَاعُوْنِ

அல்லாஹ்வின் அருள் வேதமான அல் குர்ஆனை ஓதுவதன் சிறப்பு அதனை விளங்குவதன் முக்கியத்துவம் குறித்து முன்னைய பாடத்தில் கற்றோம். அதன் போதனைகளை விளங்குவதன் ஒரு முயற்சியாக நாம் ஸூரா அல்மாஊன் என்ற அத்தியாயத்தை நோக்குவோம்.

இது அல் குர்ஆனின் 107 ஆவது அத்தியாயமாகும். ஏழு வசனங்களைக் கொண்டமைந்த இது ஒரு மக்கீ ஸூராவாகும். முதல் மூன்று வசனங்கள் மக்காவிலும் அடுத்த நான்கு வசனங்கள் மதீனாவிலும் அருளப்பட்டது. இதன் இறுதி வசனத்தில் இறுதிச் சொல்லாக இடம்பெற்றுள்ள ‘அல்மாஊன்’ என்ற பதம் ஸூராவின் பெயராக சூட்டப்பட்டுள்ளது. இதன் கருத்து அற்பப் பொருள் என்பதாகும். இனி ஸூராவையும் அதன் மொழி பெயர்ப்பையும் தெரிந்துகொள்வோம்.

سُوْرَةُ الْمَاعُوْنِ مَكِّيَّةٌ وَهِيَ سَبْعُ اٰيَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَرَءَيْتَ الَّذِيْ يُكَذِّبُ بِالدِّيْنِ ۝١ فَذٰلِكَ الَّذِيْ يَدُعُّ الْيَتِيْمَ ۝٢ وَ
لَا يَحُضُّ عَلٰى طَعَامِ الْمِسْكِيْنِ ۝٣ فَوَيْلٌ لِّلْمُصَلِّيْنَ ۝٤ الَّذِيْنَ هُمْ عَنْ
صَلَاتِهِمْ سَاهُوْنَ ۝٥ الَّذِيْنَ هُمْ يُرَآءُوْنَ ۝٦ وَيَمْنَعُوْنَ الْمَاعُوْنَ ۝٧

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் ஓதுகின்றேன்.

1. (நபியே) கூலி கொடுக்கும் நாளைப் பொய்யாக்குபவனை நீங்கள் கவனித்துப் பார்த்தீர்களா?
2. (திக்கற்ற) அனாதைகளை விரட்டுபவன் அவன்தான்.
3. அவன் ஏழைகளுக்கு (உணவளிக்காததுடன்) உணவளிக்குமாறு (பிறரைத்) தூண்டுவதுமில்லை.
4. (கவனமற்ற) தொழுகையாளிகளுக்கும் கேடுதான்.
5. அவர்கள் எத்தகையவர்கள் என்றால் தங்கள் தொழுகைகளை விட்டும் மறந்தவர்களாக இருக்கிறார்கள்.
6. மேலும் அவர்கள் (தொழுத போதிலும் மக்களுக்குக்) காண்பிக்கவே தொழுகிறார்கள்.
7. (மேலும் ஊசி போன்ற) அற்பப் பொருளையும் (இரவல் கொடுக்காது) தடுத்துக் கொள்கிறார்கள்.

## இந்த ஸூரா தரும் படிப்பினைகள்:

1. இவ்வுலகில் செய்யும் நற்செயல்களுக்கு நற்பலனும், பாவ காரியங்களுக்குத் தண்டனையும் மறுமையில் கிடைக்குமென்ற மனிதனின் நம்பிக்கையே, மனிதன் படைப்பினங்கள் மீது அன்பு காட்டவும் அல்லாஹ்வுக்கு செய்ய வேண்டிய கடமைகளைச் சீராக செய்து தனது வாழ்வை ஒழுங்கமைத்துக் கொள்ளவும் முக்கிய தூண்டுகோலாக அமையும்.
2. எந்த மனிதனிடம் மறுமை நாள் பற்றிய நம்பிக்கை உள்ளத்தில் ஆழப் பதியவில்லையோ அவன்தான் அனாதைகளை முரட்டுத் தனமாக நடத்துவான். அவர்களைக் கேவலமாகக் கருதி வெருட்டவும் செய்வான். அவர்களின் உரிமைகளை மறுத்து, தொல்லை கொடுத்து, சொத்துக்களை அபகரிப்பான். இதற்கு மாற்றமாக அனாதைகளையும் ஏழைகளையும் அன்புடன் வரவேற்று உபசரிப்பது நியாயத் தீர்ப்பு நாளை நம்பியதற்குச் சான்றாகும்.
3. ஏழைகளுக்கு உணவளிப்பது மாத்திரமன்றி, பிறரை ஏழைகளுக்கு உணவளிக்கத் தூண்டுபவராக இருப்பதுவும் மறுமை மீதான விசுவாசத்தின் அடையாளமாகும்.
4. இஸ்லாத்தில் எந்தவொரு செயலும் உளத் தூய்மையுடன் நிறை வேற்றப்படாதபோது அவற்றுக்கு அல்லாஹ்விடத்தில் எந்தப் பெறுமானமும் கிடையாது. பிறர் பார்த்து மதிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் நிறைவேற்றப்படும் தொழுகை பயனற்றதாகி விடும். அவர்கள் தொழுகைக்குரிய

புறத் தோற்றங்களை நிறைவேற்றுகின்றார்கள். அந்தத் தொழுகை அவர்களது உள்ளத்தோடு ஒன்றியிருக்காது. ஓதுபவை குறித்து அவனது உள்ளம் உணராது. தொழுகையின் யதார்த்தத்தை அவர்கள் எண்ணிக்கூட பார்க்க மாட்டார்கள். எனவே, உண்மையான தொழுகை அல்லது பயனுள்ள தொழுகை என்பது மன ஓர்மைப்பாட்டுடன் அதன் யதார்த்தத்தை நெஞ்சில் நிறுத்தி இறைவனுக்காக என்ற தூய எண்ணத்துடன் நிறைவேற்றப்படுவதாகும்.

5. அற்பப் பொருளைக் கூட இரவலாகக் கொடுப்பதற்கு ஒருவரது உள்ளம் முன்வரவில்லை என்றால் அவரது மறுமை நம்பிக்கையில் கோளாறு உள்ளது என்பதுவே கருத்தாகும். அவரது தொழுகை அவரில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை என்பதே உண்மையாகும்.

**எனவே, இந்த ஸூராவை ஓதி விளங்கி, இதனை மனனமிட்டு அதன் போதனைகளை உள்ளத்தில் ஆழமாகப் பதித்து நற்செயல்களில் ஈடுபட்டு வெற்றியடைய வழியமைத்துக் கொள்வோமாக!**

### பயிற்சி

**பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக.**

1. *ஸூரா அல்மாஊன் அல் குர்ஆனில் (103, 105, 107) ஆவது அத்தியாயமாகும்.*
2. *அல்மாஊன் என்பதன் கருத்து (உதவி, குறை கூறுதல், அற்பப் பொருள்) என்பதாகும்.*
3. *ஸூரா அல்மாஊனில் இடம்பெற்றுள்ள 'அத்தீன்' என்ற சொல்லின் கருத்து (மார்க்கம், கூலி கொடுக்கும் நாள், எழுந்து நிற்கும் நாள்) என்பதாகும்.*
4. *''தொழுகையாளிகளுக்கு கேடுதான்'' என இந்த ஸூரா அடையாளப் படுத்தியவர்கள் (விட்டுவிட்டு தொழுபவர்கள், தொழுகையை விட்டும் மறந்தவர்கள், தொழாதவர்கள்) ஆவர்.*

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக:**

1. *(அ) ஸூரா அல்மாஊனின் வசனங்கள் எத்தனை விடயங்கள் பற்றி எமக்குப் போதிக்கின்றது?*

   *(ஆ) ஸூரா மாஊனில் எத்தனை ஆயத்துக்கள் உள்ளன?*

   *(இ) அல்மாஊன் என்பதற்குச் சில உதாரணங்கள் தருக.*
2. *இந்த அத்தியாயம் நம்பிக்கையையும் சமூக வாழ்வையும் எவ்வாறு தொடர்புபடுத்துகின்றது?*
3. *மறுமை நம்பிக்கையற்றவன் என்பதை எடுத்துக்காட்ட இந்த ஸூரா முன்வைக்கும் பண்புகளைக் குறிப்பிடுக.*

4. எமது தொழுகைகளை உயிரோட்டமாக அமைத்துக் கொள்வதற்கான வழிகள் யாவை?
5. அனாதைகளுக்கும் ஏழைகளுக்கும் உதவுவதற்கான வழிமுறைகள் சிலவற்றைக் குறிப்பிடுக.

**பின்வருவனவற்றை இணைக்குக:**

| அ | ஆ |
| --- | --- |
| 1. தொழுகையாளிகளுக்கு கேடுதான் | اَرَءَيْتَ |
| 2. நீர் பார்க்கவில்லையா? | يَدُعُّ الْيَتِيْمَ |
| 3. அற்ப பொருட்களையும் தடுப்போர் | يُرَاءُوْنَ |
| 4. அனாதைகளை விரட்டுதல் | فَوَيْلٌ لِّلْمُصَلِّيْنَ |
| 5. பிறருக்கு காண்பிக்கவே | وَيَمْنَعُوْنَ الْمَاعُوْنَ |